**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 200/2021</u>**

நாள் 16.02.2026

DW3 – லட்சுமணன்

த/பெ – பழனிச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of February 2026)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் கோவை சௌரிபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் பிறந்ததிலிருந்து சௌரிபாளையத்தில் தான் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகளை தெரியுமா என்றால் கேள்விபட்டுள்ளேன். வாதிகள் இருவரும் இறந்துபோன ராமசாமியின் பெண் மக்கள் என்றால் சரிதான். அந்த ராமசாமிக்கு சாமிநாதன் என்ற மகன் உண்டு என்றால் சரிதான். அந்த சாமிநாதனின் வாரிசுகள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண். எதுவும் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் உள்ள எனது அப்பா பழனிச்சாமி உயிரோடு இல்லை என்றும், அதேபோல் எனது அப்பாவின் கையெழுத்தை அடையாளம் காட்ட வேண்டி தான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். அந்த உயில் சாசனத்தை எழுதிக்கொடுத்த ராமசாமி எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்தை பொறுத்து எழுதி கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதேபோல், அந்த உயில் சாசனம் எந்த தேதியில் எழுதி வைத்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. அந்த உயில் சாசனத்தில் என்னென்ன ஷரத்துக்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்ற விபரமும் எனக்கு தெரியாது. அதேபோல், அந்த

உயில் சாசனம் எழுதி கொடுத்த போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.16 15:11:22 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**